சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் 26.08.2025
வா.சா.1 – வள்ளி க/பெ.பெரியசாமி
O.S. No.266/2023
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

வழக்கு சொத்து என் தந்தையின் சொத்து ஆகும். அதை பாண்டியம்மாள், இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி உடையப்பனிடம் விற்பனை செய்தது தொடர்பாக எங்களுடைய சொத்து என்ற கேட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறோம் மேற்படி கிரைய ஆவணமானது மோசடியானது என்று பரிகாரம் கேட்டிருக்கிறோம். இந்த வழக்கில் மொத்தம் எத்தனை இலக்க சொத்துக்களுக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஒரு சொத்து தான் அதில் இரண்டு பிரிவுகளாக சொத்து வாங்கப்பட்டதில் ஒரு பிரிவு சொத்தை பாண்டியம்மாள் விற்பனை செய்துள்ளார். மற்றொரு பிரிவு சொத்து என் தந்தை ஆண்டி பெயரில் உள்ளது. என் தந்தை ஆண்டி பெயரில் உள்ள சொத்து தொடர்பாக ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் வீட்டில் இருக்கிறது. பாண்டியம்மாள் 2ம் பிரதிவாதியான உடையப்பனுக்கு விற்பனை செய்த சொத்தானது 56 செண்டு ஆகும். எந்த சர்வே நம்பர் என்று நினைவில்லை. வழக்கு சொத்து நரசிங்கம்பட்டியில் உள்ளது. என் தந்தை ஆண்டி அழகர்சாமி வகையறாவிடம் இருந்தும் கன்னையா வகையறாவிடம் இருந்தும் கிரையம் பெற்றார் எந்த வருடம் என்று தெரியவில்லை. கன்னையா மற்றும் அழகர்சாமி ஆகியோருக்கு வழக்கு சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் பார்த்து என் தந்தை கிரையம் பெற்றாரா என்றால் ஆம் அதற்கு ஆவணம் உள்ளது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து என் தந்தை ஆண்டி, கன்னையா மற்றும் அழகர்சாமி வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றது செல்லாது என்றும் கன்னையா

மற்றும் அழகர்சாமிக்கு வழக்கு சொத்து பாத்தியமே அல்ல என்றால் சரியல்ல. உரிய உரிமையாளரிடம் இருந்து என் தந்தை ஆண்டி கிரையம் பெறவில்லை என்றும் ஆகையால் என் தந்தை பெற்ற கிரைய பத்திரம் நடைமுறைக்குவரவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்வதற்கு 1ம் பிரதிவாதி பாண்டியம்மாள் மனு கொடுத்தாரா என்றால் தெரியாது நாங்கள் வெளியே இருந்தோம். மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு கொடுக்கப்பட்டு அந்த விசாரணையில் என் அண்ணன் தர்மராஜன் வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் எல்லோரும் ஊரிலே இல்லை, வெளியூரில் இருந்தோம். என் அண்ணன் தர்மராஜன் வாக்குமூலம் கொடுத்து அதனடிப்படையில் தான் என் அப்பா பெயரில் இருந்து வழக்கு சொத்து தொடர்பான பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலர் நீதிமன்றத்தில் உத்தரவானது 30.10.2015 அன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எல்லாம் தெரிந்தும் தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காலம் தாழ்த்தி 7 வருடம் சென்று வழக்கு தாக்கல் செயயப்பட்டுள்ளதால் வழக்கு காலவதியாகிவிட்டது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பாண்டியம்மாள், 2ம் பிரதிவாதி உடையப்பனுக்கு விற்பனை செய்த விபரம் விற்பனை செய்த 4 நாட்களில் தெரியவந்தது. EC போட்டு பார்த்தோம் அதில் தான் தெரிந்தது.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. )

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.08.26 16:41:23 +0530

Sub Judge

Melur